# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்)

**மைத்திரிபால சேனாநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம அவர்களால் 2011, பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, சனவரி மாதம் 31 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **72 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 005502-350 (2011/02)

## மைத்திரிபால சேனாநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்

*முகவுரை.*

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் என்னும் பெயரில் அறிமுகப்படுத்தப்படும் அமைப்பொன்றை, அந்த அமைப்பிலுள்ள உறுப்பினர்கள் இணங்கிய சட்ட விதி முறைகளுக்கு ஏற்ப, அந்த அமைப்பு தொடர்பான அனைத்து விடயங்கள் மற்றும் நோக்கங்களை பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்கு அவற்றை செயல்படுத்திக் கொண்டுசெல்லும் பணிக்காக இன்று அனுராதபுர மாவட்டத்தின் மதவாச்சி தொகுதியின் “சிறிமெதுர”, கியூலேகட, கெபிதிகொள்ளாவ என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருப்பதனாலும் :

எந்த விடயங்களுக்காக, நோக்கங்களுக்காக அந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டதோ, அந்த விடயங்களும், நோக்கங்களும் குறித்த அந்த அமைப்பினால் இன்றுவரை மிக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டபடியினாலும், குறித்த அந்த அமைப்பை கூட்டிணைக்கும்படி கோரப்படுவதாலும், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவது பொது மக்களுக்கு நன்மையாக இருப்பதனாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*மைத்திரிபால சேனாநாயக்க மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் செயற்படுத்தப்படும் ஆரம்ப திகதியிலிருந்தும் மற்றும் இதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பிடப்படுகின்றது) மைத்திரிபால சேனாநாயக்க அமைப்பில் தற்போது உறுப்பினர்களாக இருக்கும் நபர்களும் இதிலிருந்து கூட்டிணைக்கப்படும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைப்புக்கு இதன்பின்னர் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படுவோர் “மைத்திரிபால சேனாநாயக்க மன்றம்” என்ற பெயர் மற்றும் சின்னத்தின்கீழ், இருப்பைக் கொண்டதுமான அமைப்பாக தொடர்ச்சியாக இருத்தல்

2-PL 005502-70 (2011/02)

வேண்டும். அந்தப் பெயருக்கு அந்த அமைப்பாலும் அதற்கு எதிராக எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியும். மேலும் பொதுவான இலச்சினையொன்றை வைத்துக் கொள்வதற்கும் அதைப் பாவிப்பதற்கும் தமது விருப்பப்படி அதை மாற்றியமைப்பதற்கும், பூரண பலமும் அதிகாரமும் அந்த அமைப்புக்கு உள்ளது.

அமைப்பின் பொதுவான நோக்கங்கள்.

**3**. இந்த அமைப்பு எந்த பொது நோக்கங்களுக்காக கூட்டிணைக்கப்படுகின்றதோ அந்த நோக்கங்கள் கீழ்வருமாறு அமைய வேண்டும் என்று இங்கு குறிப்பிடப்படுகின்றது :

(அ) மைத்திரிபால சேனாநாயக்க மன்றத்துடன் இலங்கை லக்ஷ்மி காந்தா சங்விதானய, செனுறி மினுறி அமையம் ஆகிய சமூக அபிவிருத்தி மன்றங்களும் இணைந்த நிறுவனங்களாகச் செயற்படும் ;

(ஆ) இலங்கையில் வழங்கப்படும் கல்வியின் மூலம் தமது அறிவு, ஆற்றல் மற்றும் தெளிவு பெறுவதை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக மாணவ, மாணவிகளுக்கான கல்வி கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடத்துதல் விசேடமான ஆற்றலுள்ள மாணவ, மாணவிகளுக்காக பல்கலைக்கழக கல்வி வரை புலமைப்பரிசில் திட்டத்தை ஏற்படுத்துதல், அவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல், அறநெறிப் பாடசாலைகள், முன்பள்ளிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி உதவிகளை வழங்குதல் ;

(இ) பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கத்தோலிக்க மதங்கள் சம்பந்தமான கலாசார நடவடிக்கைகளின் போது, அவற்றின் அபிவிருத்திக்காக இன்றுவரை நிதி உதவி மற்றும் சந்தர்ப்பங்களை வழங்குதல் மேலும் சமூகத்தில் மதரீதியிலான அந்நியோன்னிய உறவுகள், நம்பிக்கை மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்தல் ;

(ஈ) நகர, கிராம மற்றும் தோட்டப்பகுதிகள் உள்ளடங்கும் வண்ணம், அடிப்படை சுகாதார வசதிகள் பற்றி அவர்களுக்காக அறிவுறுத்தப்படும். சூழல் பாதுகாப்பு

பற்றிய நிகழ்ச்சிகளை நடத்துதல், அவர்களுக்கு சுகாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்புக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் ;

(உ) வறுமையை இயன்றவரை குறைப்பதற்காகவும், வறுமையான குடும்பங்களின் தரத்தை உயர்த்துவதற்கு மான நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடத்துவதும் அவற்றைச் செயற்படுத்துதலும், மேலும் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக திட்டங்களை அறிமுகப்படுத்து வதும், குறைந்த வருமானம் கிடைக்கும் குடும்பங்களி லுள்ள நோயாளிகளுக்கு உதவுதல் மேலும் அவர்கள் குடும்பங்களில் மங்கள, அமங்கள விடயங்களுக்காக உதவுதல் ;

(ஊ) இலங்கையின் தேசிய மற்றும் கலாசார பாரம்பரியங்கள் பற்றிய அறிவு, அனுபவங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தலும், அந்த பாரம்பரியங் களை பாதுகாத்தலும் அதற்காக நடத்தப்படும் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்காக, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளல் ;

(எ) சட்டத்தின் பாதுகாப்பு தேவைப்படுவோருக்கு சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அதற்கான சேவையொன்றை ஏற்படுத்தி செயல்படுத்துதல் ;

(ஏ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள், ஐ.நா. அமைப்பின் பிரகடனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆகியவற்றின்கீழ் பிரசைகளுக்கு தமது அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைக ளைப் பாதுகாப்பதற்காக உதவிகளை கோரும் சந்தர்ப்பங்களில் அது விடயங்களில் தலையிட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் ;

(ஐ) நவீன விஞ்ஞான மற்றும் தொழினுட்ப துறைகளில் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் அறிவூட்டுதன்

மூலம், அவர்களது அறிவு மற்றும் தொழில் ரீதியான ஆற்றலை விருத்தி செய்வதுடன் அவர்களது புதிய படைப்புக்களுக்கு கௌரவமளித்தல் ;

(ஒ) தொழினுட்பம், கட்டட நிர்மாணம், தகவல் தொடர்பு தொழில் நுட்பம், கணனி, கையடக்க தொலைபேசி உட்பட சந்தையில் மிகக் கூடுதலாக காணப்படும் தொழில் துறைகளில் பயிற்சியளிப்பதற்காக இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சந்தர்ப்பங்களை வழங்கி பயிற்சிகளுக்குப்பின் அவர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(ஓ) சித்திரம், சிற்பக் கலை வேலைப்பாடு, சங்கீதம், நடனம், பாட்டு, நாடகம், குறுநாடகம், சினிமா உட்பட அழகியற் கலைத்துறைகளில் ஈடுபடுபவர்களை உற்சாகப்படுத்தலும், அவர்களது படைப்புகளுக்கு கௌரவமளித்து அவர்களது ஊடகத்துறைக்குத் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுத்தல் ;

(ஔ) "விளையாட்டுத் திறன்" என்னும் பெயரில் திட்டமொன்றை ஆரம்பித்து, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இலக்குகளை அடையும் வண்ணம், விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் உருவாக்குதல், கிராமிய விளையாட்டுத்துறையை பாதுகாக்கும் வண்ணம் அவற்றை "தேசிய பாரம்பரியங்கள்" என்ற வகையில் பாதுகாப்பதற்காக கிராமிய விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்குபடுத்துதல் ; அத்துடன்

(க) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் நடைபெறக்கூடிய, பேராபத்துக்களின்போது, சுறுசுறுப்பாக அவற்றில் தலையிட்டு செயல்படுத்துவதற்கு நூறு இளைஞர்கள் மற்றும் யுவதிகளை உள்ளடக்கிய விசேடமான பேராபத்து முகாமைத்துவ குழுவொன்றை ஸ்தாபித்து அவர்களுக்கு பேராபத்து பற்றிய பயிற்சியை வழங்குதல்;

*அமைப்பின் பொதுவான அதிகாரங்கள்.*

**4**. இந்த சட்டமூலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு எழுத்து மூலமான சட்டமொன்றின் விதிமுறைகளுக்கு ஏற்ப, எமது அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக:

(அ) அமைப்பின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான இடங்கள் மற்றும் கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கு, கையேற்பதற்கு, வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு, கட்டிடங்களை எழுப்புவதற்கு அல்லது வேறு வகையில் பெற்றுக் கொள்வதற்கு ;

(ஆ) வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு, அவற்றை இயக்குவதற்கு மற்றும் நிறுத்தி விடுவதற்கு ;

(இ) பிணை அல்லது பாதுகாப்புடன் அல்லது அவ்வாறில்லாமல் பணத்தை கடனாகப் பெறுவதற்கும் பணத்தைத் திரட்டுவதற்கும் ;

(ஈ) உள்நாட்டு, வெளிநாட்டு நிதி மற்றும் வேறு உதவிகள், அன்பளிப்புக்கள் ஆகியவற்றை பொறுப்பேற்றலும், திரட்டலும் ;

(உ) தேவையான உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் நியமிப்பதற்கும், பணியில் ஈடுபடுத்துவதற்கும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கும் மற்றும் வேலையிலிருந்து நீக்குவதற்கும் ; அத்துடன்

(ஊ) அமைப்பின் நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களில் ஏதேனுமொரு நோக்கத்தை தேவைக்கேற்ற வகையில் விருத்தி செய்வதற்கும் அல்லது மேலோங்கச் செய்வதற்கும் குழுக்களை நியமிப்பதற்கும் அல்லது தேவையான எந்த ஒரு வகையிலும் அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு, தேவைகளை ஈடுசெய்யவும், தேவையானவற்றை இயக்கவும் அமைப்புக்கு அதிகாரமுண்டு ;

*அமைப்பின் நடவடிக்கைகளை முகாமைத்துவப் படுத்தல்.*

**5**. (1) அமைப்பை இயக்குவதற்கு அப்போதைக்கு வலுவிலுள்ள சட்ட விதிமுறைகளுக்கும் இந்த சட்டத்திலுள்ள விதிமுறைகளுக்கு ஏற்பவும் தெரிவு செய்து நியமிக்கப்படும் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர், அமைப்பாளர் மற்றும் ஆலோசனைக் குழுவின் தலைவர் ஆகியோர் உள்ளடங்கிய முகாமைத்துவ குழுவொன்றினால் நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படல் வேண்டும்.

(2) அமைப்பின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்லும் வேளையில் முகாமைத்துவ சபை அமைப்பின் பணிப்பாளர் சபை என்று அழைக்கப்படல் வேண்டும். முகாமைத்துவ சபையின் தலைவர் அமைப்பின் பணிப்பாளர் நாயகமாக இருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களில் ஒருவர் நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளராக பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படல் வேண்டும். பொருளாளரை அமைப்புக் கணக்கு விடயங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளராகவும், உபதலைவர், உபசெயலாளர், அமைப்பாளர் மற்றும் ஆலோசனை சபையின் தலைவர் ஆகியோர் பணிப்பாளர் சபையின் ஏனைய உறுப்பினர்களாகவும் நியமனம் பெறுவர்.

(3) அந்த சரத்தின் (1) உப சரத்துக்கு மாற்றமாக என்னதான் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இந்த அமைப்பின் ஸ்தாபகர் தற்போது மாத்தளை, அனுராதபுர மாவட்டம், கபிட்டிகொல்லாவ, கியூ லேடே "சிறிமெதுர"வில் வசிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. திரு. திஸ்ஸ விஜயரத்தின கரலியத்த அமைப்பின் ஆயுட்கால தலைவராக இருப்பார் அவருக்குப் பின் அவரால் இப்பதவிக்காக மற்றும் ஒருவர் நியமிக்கப்படாதிருப்பின் முகாமைத்துவ சபையின் ஏனைய உறுப்பினர்களால் அந்தப் பதவிக்காக ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

(4) இந்தச் சட்டம் செயற்பட தொடங்குவதற்கு முந்திய நாளில் நடைபெற்ற மைத்திரிபால சேனாநாயக்க அமைப்பில் பதவிகள் பெற்றிருந்த உறுப்பினர்கள் அமைப்பின் முதலாவது முகாமைத்துவ சபையில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*ஆலோசனை சபை.*

**6**. அமைப்பின் ஆலோசனை சபை ஒன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை சபைக்கு முகாமைத்துவ சபையின் கூட்டங்களிலும் பொதுச்சபை கூட்டங்களிலும் பங்கு பற்ற முடியும். அமைப்பின் மேம்பாட்டுக்காக ஆலோசனையை

வழங்கும் அதேவேளை மேற்படி கூட்டங்களில் தமது ஆலோசனைகளை வழங்கவும் ஆலோசனைச் சபைக்கு முடியும். எனினும் பிரேரணை ஒன்றை முன்வைக்கவும் ஒன்றை ஆமோதிக்கவும் வாக்களிக்கவும் ஆலோசனை சபைக்கு உரிமை இல்லை.

*அமைப்பின் விதி முறைகள்.*

**7.** *(1)* அமைப்பினால் எந்த ஒரு பொதுச் சபை கூட்டமாக இருப்பினும் அதற்கு சமுமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் இந்த மசோதாவிலும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டமொன்றின் விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்லாத வண்ணம் கீழ்வரும் அனைத்து விடயங்களுக்காகவும் அல்லது அதில் ஒரு சிலவற்றுக்காகவும் இடையிடையே சட்டம் இயற்றுவது சட்டத்துக்கு ஏற்புடையதாகும் :-

(அ) உறுப்பினர்களால் செலுத்த வேண்டிய கட்டணம், அவர்களை உள்வாங்குதல், அவர்களை விலக்குதல் அல்லது கேட்டு விலகுதல் ;

(ஆ) முகாமைத்துவ சபையை தெரிவு செய்து நியமித்தல், அதிகாரிகள் பதவிகள் கைவிடல் அல்லது பதவிகளில் இருந்து வெளியேற்றல் மற்றும் முகாமைத்துவ சபையின் பதவிகள், பணிகள் மற்றும் கடமைகள், தத்துவங்கள் ;

(இ) அமைப்பின் பணிகளை பயனுள்ளதாகவும் வினைத்திறனுடனும் செய்துகொண்டு செல்வதற்காக பொதுச் சபையில் பொருத்தம் என்று தீர்மானிக்கப்படும் பல்வேறு பதவிகளை ஏற்படுத்துதல் அந்த பதவிகளுக்காக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் பணிப்பாளர்களை நியமித்தல், அவர்களது அதிகாரங்கள், கடமைகள், பணிகள், சம்பளங்கள், கொடுப்பனவுகள் அல்லது வேதனங்களைத் தீர்மானித்தல் ;

(ஈ) முகாமைத்துவ சபையின் அல்லது அமைப்பின் கூட்டங்களின் போது பின்பற்றப்பட வேண்டிய செயல் விதி முறைகள், அந்தக் கூட்டங்களுக்காக அழைப்பு

விடுத்தல் மற்றும் அவற்றை நடத்துதல், அந்தக் கூட்டங்களில் உள்ள பதவிகளை நிரப்புதல் அறிவித்தலும் நிகழ்ச்சி நிரலும் கூட்டம் பற்றிய கோரம் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இயங்கும் முறை ;

(உ) முகாமைத்துவ சபையின் ஆலோசனைக்குழுவின் மற்றும் அமைப்பின் உறுப்பினராவதற்கான தகுதிகளும் தகுதியற்ற நிலையும் ; அத்துடன்

(ஊ) அமைப்பின் சொத்துக்களை நிர்வகித்தல், முகாமைத்துவப்படுத்தல் மற்றும் அவற்றின் நோக்கங்களை நிறைவேற்றல் ;

(2) இந்த மசோதாவை செயல்படுத்தும் தினத்திற்கு முன்தினத்தில் நடைபெற்ற அமைப்பின் சட்டவிதி முறைகளுக்கு ஏற்புடையதாகாதவரை இவ்வமைப்பின் சட்டமாக கணிக்கப்பட வேண்டிய அதேவேளை அந்த விதிகள் இந்த சரத்தின் 1 ஆம் உபவாசகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதியொன்றைப் போன்ற கூட்டமொன்றில் அதேபோன்று நிறுத்துதல், மாற்றி அமைத்தல் அதற்கு எதையேனும் கூட்டுதல் அல்லது பரிசீலித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

(3) அமைப்பிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் சட்டவிதிகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

**8**. (1) அமைப்புக்கு நிதி ஒன்று இருத்தல் வேண்டும். அதன் நிதியாண்டு ஒவ்வொரு வருடமும் சனவரி 1 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை இருத்தல் வேண்டும். அமைப்புக் கான நிதியம்.

(2) அமைப்புக்காக பெறப்படும் அன்பளிப்புகள், கொடைகள், நன்கொடைகள், இனாமாக கிடைப்பவை, கட்டணங்கள் மற்றும் வரவுகள் அமைப்பின் முகாமைத்துவ சபையால் அங்கீகரிக்கப் படும் வங்கி ஒன்றில் அமைப்பினால் வைப்புச் செய்தல் வேண்டும்.

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது:-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையின் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*அமைப்பின் முத்திரை.*

**10**. அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது அமைப்பினால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட முகாமைத்துவ சபையின் வேறு இருவரது முன்பாகவன்றி அமைப்பின் முத்திரையை வேறேதேனும் பத்திரத்தில் பதியக் கூடாது. தாம் வருகை தந்திருப்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் அவர்களால் அந்த பத்திரத்தில் தமது பெயரை கையொப்பமிட வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*யாப்பை திருத்தியமைத்தல்.*

**11**. குறித்த யாப்பை பொதுச்சபை கூட்டமொன்றின் போது மைத்திரிபால சேனாநாயக்க அமைப்பு உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கொண்டு திருத்தியமைக்க முடியும்.

*கலைத்தல் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**12.** முகாமைத்துவ சபையின் ஏகமனதான தீர்மானத்தின்படி அமைப்பை கலைத்துவிடலாம் அவ்வாறு அமைப்பை கலைக்கும் வேளையில் அமைப்புக்கு சொத்துக்கள் ஏதும் இருப்பின், அந்த சொத்துக்கள் அமைப்பின் ஸ்தாபகரின் மேற்பார்வையில் பொருத்தமான ஒரு தர்ம தாபனத்திற்கு அல்லது அரச நிறுவன மொன்றுக்கு வழங்க முடியும்.

*குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளை பாதுகாத்தல்.*

**13.** இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களினதும் அவர்களின் மூலம் அவர்களது அல்லது அவர்களுக்குகீழ் உரிமைகோரும் வேறு நபர்களது உரிமைகளுக்காகவன்றி குடியரசின் அல்லது ஏதாவது அரச சபையினது அல்லது அமைப்பின் அல்லது வேறு ஒரு நபரினது அல்லது உரிமைக ளுக்கு இந்த மசோதாவில் உள்ள ஏதேனும் ஒரு விடயத்தினால் பாதிப்போ அல்லது அழுத்தமோ ஏற்படப்போவதில்லை.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*